# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (13.06.2015 முதல் 17.06.2015)

**அறிக்கை எண் 45/2015** **தேதி: 12.06.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 29°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 20°செ முதல் 24°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணபட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (13.06.2015 முதல் 17.06.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 13.6.15 முதல் 14.6.15 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது மற்ற நாட்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 76 முதல் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13.06.15 | 10 | 33 | 24 | 6 | 78 | 56 | 12 | தென்மேற்கு |
| 14.06.15 | 8 | 33 | 24 | 6 | 78 | 56 | 12 | தென்மேற்கு |
| 15.06.15 | 4 | 33 | 24 | 6 | 78 | 56 | 12 | தென்மேற்கு |
| 16.06.15 | 2 | 33 | 23 | 5 | 76 | 56 | 12 | தென்மேற்கு |
| 17.06.15 | 2 | 33 | 23 | 5 | 76 | 56 | 12 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் 5 நாட்கள் மேகமூட்டம் அதிகமாக காணப்படுவதால், இறவைப்பயிருக்கு மண் வழியாக தழை மணி மற்றும் சாம்பல் சத்து இடுவதை தவிர்க்கவும்.
- ✓ மழை மற்றும் காற்றின் வேகம் மணிக்கு 12கிமீ அளவில் வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ வரும் நாட்களில் மழையுடன் இடியும் மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால் நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம்.
- ✓ பூக்கும் நிலையிலுள்ள கோடை கால பயறுவகைகளுக்கு 2 சதம் டிஏபி கரைசல் அல்லது ஒரு ஏக்கருக்கு 2.00 கிலோ "பயறு வோன்டரை" 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவமான டீபாலுடன் கலந்து மழையில்லாத தருணங்களில் தெளிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ பூக்கும் நிலையிலுள்ள கோடை கால பயறுவகைகளுக்கு 2 சதம் டிஏபி கரைசல் அல்லது ஒரு ஏக்கருக்கு 2.00 கிலோ "பயறு வோன்டரை" 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவமான டீபாலுடன் கலந்து மழையில்லாத தருணங்களில் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.